அமெரிக்கத் தமிழ் கல்விக்கழகம் American Tamil Academy

# நிலை மூன்று கையேடு
# Nilai 3 – Hand Book

4/17/2014

இராமசாமி சோமசுந்தரம்

# அமெரிக்கத் தமிழ்க் கல்விக் கழகம்

# American Tamil Academy

## நிலை – 3 பாட நூல்

## பள்ளி ஆண்டு : 2013-14

www.americantamilacademy.org / www.amtaac.org

Email: support@amtaac.org

# நிலை 3 பாடத்திட்டம் – முக்கிய குறிப்புகள்

# NILAI 3 – COURSE CONTENT – MAIN BULLETS

## வயது வரம்பு:

- குறைந்த பட்சம் 7 வயது.

## தகுதி:

- அ த க நிலை 2 முடித்திருக்க வேண்டும்.

## நோக்கம்:

- தமிழ் மொழியின் அனைத்து எழுத்துகளையும் பயிற்றுவித்தல்.
- எழுத்துகளுடன் பெயர்ச்சொற்கள் மற்றும் வினைச்சொற்களைப் பயிற்றுவித்தல்.
- மிக எளிமையான முறையில் தமிழ் இலக்கணப் பாடங்களை அறிமுகப்படுத்துதல்.
- திருக்குறள், ஆத்திசூடி, பழமொழிகள் மற்றும் பாடல்கள் பயிற்றுவித்தல்.

## மொழித்திறன்:

- சிறு வாக்கியங்களைப் படித்து புரிந்து கொள்ளுதல், எழுதுதல்.
- சிறுகதைகளை உள்வாங்கி கருத்தைப் புரிந்து கொள்ளுதல்.

## இலக்கணம்:

- வினைச் சொற்கள் மற்றும் கால நிலைகளை அறிதல்;
- ஒருமை-பன்மை, எதிர்ப்பதம், குறில்-நெடில் என எளிமையான இலக்கண அடிப்படைகளை அறிந்து கொள்ளுதல்.

# நிலை 3 – விரிவான பாடத்திட்டம்

**நிலை மூன்று பாடப் புத்தகத்தின் கட்டமைப்பு :** தமிழ் எழுத்துகள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, முதல் பகுதியானது நிலை இரண்டிலும், இரண்டாம் பகுதியின் எழுத்துகள் இந்த நிலை மூன்றிலும் பயிற்றுவிக்கப் படுகிறது. இந்த மூன்றாம் நிலையில், குறைந்தபட்சம் ஐநூறு சொற்களாவது பயிற்றுவிக்கப்படுகிறது. நிலை இரண்டைப் போலவே, பெயர்ச்சொற்களை மட்டுமன்றி, வினைச்சொற்களையும், அவற்றின் மூலம் உருவான எளிதான சொற்றொடர்களையும் பயிற்றுவிப்பது இந்த நிலையின் முக்கிய நோக்கமாகும். இவற்றைத் தவிர, வாசிப்பதற்கும், எழுதுவதற்கும் கதை வடிவிலான பத்திகள், குறிப்பாக அந்த அந்த பாடத்தில் பயிற்றுவிக்கப்பட்ட எழுத்துகளால் உருவான பத்திகள் அனைத்து பாடங்களிலும் உள்ளன. நிலை இரண்டில் எ வரிசை உயிர்மெய் எழுத்துகள் வரை பயின்ற குழந்தைகள், இந்த நிலையில் ஏ வரிசையிலிருந்து மீதமுள்ள அனைத்து எழுத்துகளையும் கற்றுக் கொள்வார்கள். இவற்றைத் தவிர, ஒவ்வொரு பாடத்திலும் திருக்குறள் / ஆத்திசூடி / பழமொழிகள் / கதைகள் / பாடல்கள் இருக்கின்றன. அனைத்து எழுத்துகளும் பயிற்றுவிக்கப்பட்ட நிலையில், எளிதான தமிழ் இலக்கணம் இந்த நிலை மூன்றில் அறிமுகப்படுத்தப்படுகிறது.

**நிலை மூன்று பயிற்சிப் புத்தகத்தின் கட்டமைப்பு :** அ.த.க.வின் மற்ற நிலைகளைப் போலவே இந்த நிலை மூன்றிலும் பாடப்புத்தகத்தைத் தவிர, ஒரு பயிற்சிப் புத்தகமும் உண்டு. இந்தப் பயிற்சிப் புத்தகத்தில் திங்கள் முதல் வெள்ளி வரை ஒவ்வொரு நாளும் குறைந்தது 20 மணித்துளிகள் செலவிடும்படி பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**கல்வியாண்டில் பள்ளியில் பின்பற்ற வேண்டியவை:**

- அமெரிக்காவில் நடந்துவரும் பல தமிழ்ப்பள்ளிகளின் உதவியுடன் பாடத் திட்டம் தயாரிக்கப்பட்டது.
- மொத்தம் 25 பாடங்கள் மற்றும் அதற்கான பயிற்சிகள்.
- மூன்று பருவங்களாகத் தேர்வு நடத்தப்படும்.
- வகுப்பறைக்கு வருவது, வீட்டுப்பாடங்கள் நிறைவுடன் செய்வது
- மற்றும் மூன்று பருவத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்கள் ஆகிய அனைத்தையும் ஆண்டு இறுதியில் மாணாக்கரின் தமிழறிவை அறிய பயன்படுத்தப்படும்.
- 25 வகுப்பறைப் பாடங்கள் (தலா 2 மணி நேரம்) + 3 பருவ தேர்வுகள் = மொத்தம் 28 வகுப்புகள்
- 2 மணி நேர வகுப்புகள் கற்பிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

**கல்வியாண்டில் வகுப்பில் பின்பற்ற வேண்டியவை:**

2 மணி நேர கால அட்டவணை (முழு நேரமும் தமிழில் உரையாடல்).

- தமிழ்த்தாய் வாழ்த்து — 5 நிமிடங்கள்
- தமிழில் உரையாடல், கடந்த வாரம் வீட்டில், பள்ளியில் நடந்தது - 10 நிமிடங்கள்.

- புதிய எழுத்துகள் & சொற்கள் கற்றல், எழுத்துப்பயிற்சி (பாடத்திட்டபடி) -30 நிமிடங்கள்.

- வாசிப்புப் பயிற்சி – 30 நிமிடங்கள்.

- திருக்குறள் / ஆத்திசூடி / பழமொழிகள் கற்றல் - 15 நிமிடங்கள்

- பாடல்கள் கற்றல் - 15 நிமிடங்கள்

- கதை நேரம் – 15 நிமிடங்கள்.

**<u>கல்வியாண்டில் வீட்டில் பின்பற்ற வேண்டியவை:</u>**

- தினமும் 30 நிமிடங்கள் வீட்டுப் பாடங்களை முடிக்க வேண்டும்.
- கடந்த வாரம் பள்ளியில் படித்த பாடங்களைப் பற்றி தமிழில் உரையாடவும்.
- பொது அறிவு - பண்பாடு, பழக்க வழக்கங்கள் பற்றி தமிழில் உரையாடவும்.
- திருக்குறள், ஆத்திசூடி, பழமொழிகள், பாடல்களை மனப்பாடம் செய்யவும்.
- ஏதேனும் பொது தலைப்பைக் குறித்து கலந்துரையாடவும்.
- திரைப்படங்கள், பாடல்கள், சிறு உரையாடல் முதலிய தமிழ் மொழி சார்ந்த ஊட

# பொருளடக்கம்


பாடம் 1: நிலை 2 மீள்பார்வை - முதற் பகுதி

பாடம் 2: நிலை 2 மீள்பார்வை - இரண்டாம் பகுதி

பாடம் 3: ஏ வரிசை உயிர்மெய் எழுத்துகள்: *கே,சே,டே,தே,பே,றே*

பாடம் 4: ஏ வரிசை உயிர்மெய் எழுத்துகள்: *யே,ரே,லே,வே,ழே,ளே*

பாடம் 5: ஏ வரிசை உயிர்மெய் எழுத்துகள்: *ஙே,ஞே,ணே,நே,மே,னே*

பாடம் 6: ஐ வரிசை உயிர்மெய் எழுத்துகள்: *கை,சை,டை,தை,பை,றை*

பாடம் 7: ஐ வரிசை உயிர்மெய் எழுத்துகள்:*யை,ரை,லை,வை,ழை,ளை*

பாடம் 8: ஐ வரிசை உயிர்மெய் எழுத்துகள்:*ஙை,ஞை,ணை,நை,மை,னை*

பாடம் 9: ஏ மற்றும் ஐ வரிசை உயிர்மெய் எழுத்துகள்: *மீள்பார்வை*

பாடம் 10: ஒ வரிசை உயிர்மெய் எழுத்துகள்:*கொ,சொ,டொ,தொ,பொ,றொ*

பாடம் 11: ஒ வரிசை உயிர்மெய் எழுத்துகள்:*யொ,ரொ,லொ,வொ,ழொ,ளொ*

பாடம் 12: ஒ வரிசை உயிர்மெய் எழுத்துகள்:*ஙொ,ஞொ,ணொ,நொ,மொ,னொ*

பாடம் 13: ஓ வரிசை உயிர்மெய் எழுத்துகள்:*கோ,சோ,டோ,தோ,போ,றோ*

பாடம் 14: ஓ வரிசை உயிர்மெய் எழுத்துகள்:*யோ,ரோ,லோ,வோ,ழோ,ளோ*

பாடம் 15: ஓ வரிசை உயிர்மெய் எழுத்துகள்:*ஙோ,ஞோ,ணோ,நோ,மோ,னோ*

பாடம் 16: ஔ வரிசை உயிர்மெய் எழுத்துகள்:*கௌ,சௌ,டௌ,தௌ,பௌ,றௌ*

பாடம் 17: ஔவரிசை உயிர்மெய் எழுத்துகள்:*யௌ,ரௌ,லௌ,வௌ,ழௌ,ளௌ*

பாடம் 18: ஔவரிசை உயிர்மெய் எழுத்துகள்:*ஙௌ,ஞௌ,ணௌ,நௌ,மௌ,னௌ*

பாடம் 19: ஒ,ஓ,ஔ வரிசை உயிர்மெய் எழுத்துகள் : *மீள்பார்வை*

பாடம் 20: எதிர்ச் சொற்கள்

பாடம் 21: ஒருமை - பன்மை

பாடம் 22: குறில் - நெடில்

பாடம் 23: தமிழ் இணையப் பல்கலைக்கழகம் - மாதிரி வினாத்தாள் 1

பாடம் 24: தமிழ் இணையப் பல்கலைக்கழகம் - மாதிரி வினாத்தாள் 2

பாடம் 25: நிலை 2 & நிலை 3 - *ஒரு மீள்பார்வை*

# Feedbacks

*[www.americantamilacademy.org/www.amtaac.org](www.americantamilacademy.org/www.amtaac.org)*

*Or*

*Email:support@amtaac.org*

